Reg. No. M. 2997.

தனிப்பிரதி 1 அணா.

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

# VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA I
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOUAYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து
வீதி நெ. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ ஞு சித்திரை மீ உகஉ (3—5—34) } No. 23.


## திருமந்திரம்

உணர்வுடை யார்கட் குலகமுந் தோன்று
முணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை
யுணர்வுடை யார்க ளுணர்ந்தவக் கால
முணர்வுடை யார்க ளுணர்ந்துகண் டாரே.

தானு மழிந்து தனமு மழிந்துநீ
டூனு மழிந்து வுயிரு மழிந்துடன்
வானு மழிந்து மனமு மழிந்தபி
ன்னு மழிந்தமை நானறி யேனே.

ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் பராபர
மொன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் சிவகதி
யொன்றிநின் றுள்ளே யுணர்ந்தே னுணர்வினை
யொன்றிநின் றேபல வூழிகண் டேனே.

---

உ

திருவருள் துணை

நந்திபதி கோல்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே
(திருவாசகம்.)

# விக்தகம்

புதுவை,
பவ-ஹு சித்திரை-மீ 21உ

## முயற்சி

உலகத்திலே யாவராலும் எக்காலத்தும் அடைய வேண்டியதும் அடையப்படுவதும் பொருளேயாகும். பொருள் செல்வம் பணம் தனம் என்பன ஒன்றே. முன்னிலைகள் நம்மைத் துன்புறுத்துவதற்கும் நாம் அத்துன்பங்களை உணர்ந்து அவற்றை நிவர்த்தி செய்ய அறியாது அவதியுறுவதற்கும் காரணம் யாதென ஆராயுமிடத்து அது பொருளின்மை என்றே கூறப்படும். முன்னிலைகளைப் பொருட்படுத்தி அவற்றில் குற்றமோ குறையோ காண்பதும், வெறுப்படைவதும், ஒருகால் விருப்படைவதும், அம்முன்னிலைகளைத் தற்சுதந்தரத்தால் அடிப்படுத்த முயன்று பலவித உபாயங்களைக் கையாண்டு அவதியுற்றுப் பழிபாவங்களைத் தேடுவதும், அம்முன்னிலைகளுக்கு அடிமையாதலும், இவற்றால் அவச்சலனமடைந்து சாதலடைவதுமே உலக மாக்கள் மாண்பு. உற்று நோக்காத குற்றத்தால் இதன் உண்மை புலப்படுவதில்லை. ஒவ்வொரு சீவனும் வைகறையில் துயில் நீத்தது முதல் இரவு உறங்கும் வரை உஞற்றும் அரியபெரிய முயற்சி என்னை? எனின், அநித்தியமான பொருளையும் போலிப் புகழையும் விரும்பி முன்னிலைகளைச் சுட்டுவதும் அதன் அசைவுகளைச் சகிக்கமாட்டாமையால் (பொறுமையால்) அதனிற் குறையோ குற்றமோ காண்பதும் அதனோடு முரண்பட்டு நிற்பதும், அதனால் அசுரத்தன்மை என்னும் மிருகத் தன்மையையே, நச்சரவை அமுதூட்டி வளர்ப்பது போல, ஆக்கமுறச்செய்வதும் இன்னோரன்ன பிறவுமாகிய செய்கைகளையே தலையாய அறமாகக் கொண்டு அதற்கேற்ப ஒழுகி, அவ்வொழுக்கத்தைச் சிறப்பிக்குமாறு தன் தன் எளிய மதிப் பொலிவுக்கு ஏற்பக் கண்டுபிடிக்கும் சிற்சில நியாயங்களால் அதனை அரண் செய்து தன் தன் வஞ்சகம் (தஸ்யுத் தன்மை) பிறர்க்குப் புலப்படாவண்ணம் பகீரத முயற்சி போன்ற வன்மையும் ஈனத்தனமும் பொருந்திய படிறுகள் நிறைந்த பலப்பல ஒழுக்க நிகழ்ச்சிகளால் அதனை மறைத்து வாணாளைக் கழித்துக் கொண்டே அடிபேர்த்துத் தென்திசை நோக்கி விரைவான கதியோடு செல்லா நிற்பதுமே யாகும். இஃது அறிஞர் என்பவரால் மறுக்க முடியாத உண்மையே.

சீவர்கள் இறைவன் அருள் விளையாட்டை— திருக்கூத்தை—இயற்கையை தங்கள் உள்ளும் புறமும் ஓவாது கண்டு இன்புற்றுப் பணிசெய்து கிடக்கும் திறன் அறியாது தற்சுதந்திர மேலீட்டினால் — யான் எனது என்னும் முனைப்பால் அவ்விறைவன் அருட்கூத்துக்கு மாறாக— திருவுள்ளத்துக்கு மாறாகத் தாங்களே கூத்தாடத் தொடங்கி அவ் இறைவனால் அளிக்கப்பட்டதும் அழியாப் பொருளாகிய சிவானந்தப் பேரமுதை அளிப்பதுமாகிய அக்ஷய பாத்திரம் என்னும் அரிய உடலை, முன்னிலைக் கோரணிப் பராக்கில் ஈடுபடுதலால், கீழே பிணமாகப் போட்டு உடைத்து விட்டு அறமுதல் நாற்பொருட் பயனையும் இழந்து பிறவி வலைப்படுகின்றார்கள். அகிலமாக்கள் போலி முயற்சியின் பயன் இதுவே என அறிதற்பாற்று. இதனையே கடுவெளிச் சித்தர் என்னும் தத்துவப் பெரியார் பின்வரும் செய்யுளால் கூறி அருளினர்.

### கடுவெளிச் சித்தர்

“ நந்தவனத்திலோராண்டி—அவன்
நாலாறுமாதமாய்க்குயவனைவேண்டிக்
கொண்டுவந்தானொருதோண்டி—மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்
[தாண்டி
பாபம் செய்யாதிருமனமே—நாளைக்
கோபஞ் செய்து நமன் கொண்டோடிப்
[போவான்.”

“ பாபத்தின் சம்பளம் மரணம்” என ஆன்றோரும் கூறினர். (விவிலிய வேதம்—Bible.)

ஆதலால் முன்னிலைகளாகிய தென்புல யமபடரால் துன்புற்று மாண்டு போகாது நாம் நித்தியத்துவம் அடைதற்கு வேண்டியது பொருளேயாகும். பொருள் என்றால் என்னை? அதுதான் பணம் என்பது. பணம் என்னும் தனமே யன்றி அதுதான் வேறு எங்கோ வெகு தூரத்தில் இருப்பதாகவும் கண்ணுக்குப் புலப்படாததாகவும் துணிந்து இறந்தபின் அதனை அடைந்து விடலாம் என அமைவது அறிவின்மையே யாகும். வேதங்கள் எல்லாம் அப்பொருளை அடைதற்கேற்ற உபாயங்களையே சோபான

முறையாக முறையிடுகின்றன. சிவர்கள் அப்பொருளை அடைந்து பலவகையான உபாயங்களாகிய சாதனங்களால், தங்கள் இச்சைகளை நிறையுட் புகுத்தி மேலேற வேண்டும் என்றே அந்நூல்கள் கூறுகின்றன. அன்றி தற்காலத்தவர் பலர் கூறுவது போல அப்பொருளை அடையாது அப்பொருளுக்கு இடமாகி விளங்கும் உடலம் அழிந்தபின் எவ்வகையான கஷ்டமும் இன்றி அருட் செல்வ வடிவினனாகிய கடவுளோடு இரண்டறக் கலந்து விடலாம் என அந்நூல்கள் கூறுவன வல்ல. மேலே கூறிய பொருளை அடைவது எவ்வாறு? அது தான் முயற்சி என்பது — வாய்மையான முயற்சி என்பது. முயற்சி இன்றி அப்பொருளைப் பெறுவதென்பது அறியாமையே. இது பற்றியே,

குறள்

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்

(ஷை ஆள்வினையுடைமை 6.)

என அருளிச் செய்தார் தேவர்.

(இ-ள்.) முயற்சி திருவினை யாக்கும் —(இலக்குமியாகிய "சி"யை அடைய முயன்றால்) அத்தகைய வாய்மையான முயற்சி இருதய கமலத்து வீற்றிருக்கும் அவ் இலக்குமியை ஆக்கமுறச் செய்தலால் நித்தியத்துவத்தை உளதாக்கும், முயற்று இன்மை இன்மை புகுத்திவிடும்—முயற்சி இன்றி மனோ தர்மத்தால் அவ் இலக்குமியை அடைந்து விடலாம் என மடிந்திருத்தல் அவ்இலக்குமி நீங்கப்பெறுவதால் மரணமாகிய சூனிய நிலையை அடையச்செய்யும் என்பது.

முயற்சி என்றால் என்னை? அது தான் "சி" யை முயலுதல் எனப் பொருள் படும். முயல்+சி=முயற்சி. "சி" என்றால் என்னை? "சி" என்றால் இலக்குமி என்பர். முயல் என்பது ஒரு பொருளை அடையுமாறு அதற்கேற்ற அசைவில் ஈடுபட்டு நிற்றலாகும். ஆதலால் வேண்டிய வேண்டியாங்கு எய்தற் பயத்ததாகிய செய்தவம் "சி" என்னும் இலக்குமியை அடைதற்கண் உளதாகும் இயக்கத்தில் ஈடுபடுதலே யாகும் என்பது வெள்ளிடை. இதுபற்றியே "முயற்சி திருவினை ஆக்கும்" எனப்பட்டது. சத்துவத்தில் ரசோகுணத் தலைமை பூண்டு இத்தகைய நற்றவத்தில் ஈடுபடாது அசுத்த அசைவு மேற்கொண்டு சோம்புவோர் "சி" என்னும் திருவை அடைந்து நித்தியத்துவம் பெறாது மரணம் அடைதல் திண்ணமாதலின் "முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" எனப்பட்டது [இன்மை=சூனியம்—மரணம்.]

சொல்லையும் பொருளையும் நன்குணர்ந்தவன் எவனோ அவனே "ஞானி" எனப்படுவன். (நான்+நீ= ஞானி—நானம் = அறிவு) தன்னிலை முன்னிலைகளின் உண்மையை—அவை இரண்டும் ஒன்றாதலை உணர்ந்தவன் அவனேஎன்பது. சொல்லையும்பொருளையும் உணர்ந்தவனே தன்னைத்தான் உணர்ந்தவன். உணர்ச்சி நிறைக்கு ஏற்ப ஆற்றலும் அவ்வுணர்ச்சியின் நிறை முதிர்ச்சிக்கு ஏற்ப அவ் ஆற்றல் பூரணப்பட்டுத் தன்னைத் தான் உணரும் தன்மை பூரணப்படுதலும் உளவாகும். சொற்கள் எல்லாம் பொருள் குறித்தனவே. விகுதிகளும் பொருள் குரித்தனவேயாகும். "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே," என்பது இலக்கண நூல். உலகத்தவரால் நிறையின்றி வழங்கப்படும் சொற்கள் போலி யெனினும் அவைகளின் உட்பொருள் அரிய பெரியகருத்துக்களை உடையனவாகும். வாய்மையேபோலியாகத் திகழ்வதால்—பற்பல உருவங்களாகக் காணப்படுதலால், "மா" வின் நிறையின் பெட்பு அதுவே யாதலால், அந்நிறையே ஐகார மாதலால் (மா+ஐ=மாயை) அதன் வாய்மையான பெயரே வியாபகமெனும் போலிக்கும் அஃதாவது போலியாகிய கற்பனைக்கும் வழங்கப் படுகின்றது. இதனை அறியாத உலக மாக்களாகிய நாம் அம் மாயையின் மயக்கிற் சிக்கி உண்மைப் பொருள் காணாது நம்முள் முரண்பட்டு சாதலடைகின்றோம். சொற்களின் உண்மைப் பொருளை அறியும் ஆற்றலே வேண்டற்பாற்று, "சத்தம் பிறந்த இடம் சகல கலைகளும் பிறக்கும்" என்றவாறு சகல கலைகட்கும் பிறப்பிடமாகிய நாதபீடத்தை நன்குணர்ந்த தத்துவப் பெரியாரே எழுத்துக்கள் சொற்களின் இலக்கணங்களையும் அவற்றின் பொருளையும் பூரணமாக அறிய வல்லராவர்.

"முயற்சி" என்பதில் "சி" என்பதன் இலக்கணமும் பொருளும் ஈண்டு ஒரு சிறிது கூறப்படும். "சி" என்றால் இலக்குமி என்பர். இலக்குமி என்பது என்னை? மகர ஒத்து "இம்" என்று கௌணமாக இயங்கும். வியாப்பியமாகிய அது வியாபகம் பெற்றபோது—விரிந்தபோது—"ம" எனப் பூத்த போது அவ் இகரம் மகரத்துக்குப் பின்வைத்து உச்சரிக்கப்படும். அஃதாவது அகர சிவம் "ம" என மலர்ந்தபோது இகர சக்தி "மி" என உச்சரிக்கப்படும். ஆதலால் "மி" என்பது ஒரு இலக்கு. இதுதான் மலையிலக்கைப் போன்றது. இதுதான் முதற்படி; அமல முதற்படி. இவ் இலக்கை அடைதலே அருந்தவப் பயன்—முயற்சி என்பது என அறிக. இதனை அடைதலால் வேண்டிய வேண்டியாங்கெய்தும். இதனை ஒருவன் அடைந்தானேல் அவன் தான் ஆதியைக்கண்டவன்—எம்பெருமான் திருவடிக்கு ஆதியைக்கண்டவன். அவனே குபேரன்; அரனது தோழன்; தம்பிரான் தோழன்; கடவுளுக்கு அணுக்கனாய் வதிபவன்; பூரண அமலம் பெறும் ஆற்றல் உடையவன்; அருட் செல்வமுடையவன்; இலக்ஷ்மீ கடாட்சமுடையவன்; ஸ்ரீகாந்தன்; ஐந்தையும் அவித்தவன்; ஐந்தாகிய ஐயத்தை ஐயமாகிய அச்சத்தை விளைக்கும் காலனை வென்றவன்; முன்

னிலைக் கோரணிகளாகிய தென்புல
யமபடரால் இடருருதவன்; அவரை
வென்றவன்; அமலமுதற்படியில் கால்
வைத்தவன்; பூரண அமலமடையப்
பெற்றவனல்லன் எனினும் மலம்
விமலமாகப் பெற்றவன்; விதேகம்
பெற்றவன்; இருவினை ஒப்பு மலபரி
பாக முடையவன்; அசுத்த நிறையை
ஓரளவிற்குச் சுத்தஞ் செய்தவன்;
எவ்வளவு நிறை சுத்தஞ் செய்தவனெ
னின் தான் நினைத்தவை யெல்லாம்
முன்வந்து நிற்கவும் தன்னுடைய மாத்
திரை-தன்மாத்திரை இன்னதுஎனக்
கண்டு அதனை எவ்வகையாக இயங்கச்
செய்ய நினைப்பினும் அவ்வகையாக
இயங்கச் செய்தற் கேற்ற
அளவு சுத்தஞ் செய்தவன் என்க.
சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற
ஐந்தின் வகை தெரிந்தவன் இவனே.
இவன் கண்ணதே உலகம் என்க.

### குறள்

சுவையொளி யூறோசை நாற்றமென்
றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

(ஷை நீத்தார் பெருமை—7.)

என்றனர் பொய்யில் புலவர்.

இவனே பௌதிகங்களின் இயல்பு
களை—நிறையை அறிந்தவன்; திணை
மயக்கங்களை அறிந்தவன்; தன் சரீர
இயல்பை அறிந்தவன்; தனக்குத்
தானேவைத்தியன்—வைத்தியநாதன்
—வைதிகன் என்க. கீழ் நிறையில்
புகாதவன் இவனே. இவனே பஞ்ச
பூத மித்திரன்— உலக மித்திரன்—
விசுவமித்திரன்—ஆக்கல் அழித்தல்
என்னும்தத்துவமுடையவன்.இவனே
பஞ்ச தருக்களையுடையவன்;
வாசிக்கு மித்திரன்; ஊரும்படியான
வாசி—ஊர்வசியின் புத்திரன்—வாசி
இஷ்டன் — வாசிஷ்டன்—வசிட்டன்
என்க. இன்னோரன்ன அரும் பெ
ரும் பெற்றிகளை யெல்லாம் தவத்தால்
—தவமெனும் வாய்மையான மதி
வைராக்கியம் எனும் முயற்சியால் ஒரு
வன் அடையப் பெற்ருல் அவனே
ஐந்தையும் நிலை நிறுத்தினவன்—ஐந்
தையும் திரப் படுத்தியவன்—அடிமை
கொண்டவன் — ஐந்திரன் — போக
முத்தன்—விமல போக முடையவன்
—காதற்காம உலகமாகிய பொன்னு
லக வாழ்வுடையவன் — இந்திரன்—
நினைத்த போகங்களை எல்லாம் நிறை
கண்டு அநுபவித்து வாய்மையான
துறவு பூணும் ஆற்றலுடையவன்
இவனே என்க. ஐந்து காரமும் அசுத்
தம் நீங்கிச்சுண்ணமான இடம்இதுவே.
இதுவே பொற்சுண்ணம்—செம்
பொன் செய் சுண்ணம். இந்த அமலப்
படிதான் எம்பெருமான் பூரண கிரு
பையைப் பெறுதற்கு — பூரண அம
லம் பெறுதற்கு இலக்காகி விளங்கும்
முதற்படி என்பது. இது தான்
"இலக்குமி". முயலுதலால் அடை
யப் படுவது இதுவே. இது தான்
முயல் சி = முயற்சி என்பது. இத்
துணைப் பெருமை வாய்ந்த முயற்சி
என்பதில் உள்ள "சி" காரம் தான்
பஞ்சகாரத்தில் நடு நாயகம் என்க.
இரு புறமும் அகரமாகிய சிவம் விள
ங்க மத்தியில்—இருதய கமலத்தில்—
மார்பில்—நெஞ்சத் தாமரையில் "சி",
என்னும் இலக்குமியை வைத்துத்
தழுவுகின்ருன் எம்பெருமான்.

{ அ இ அ }
{ நம சி வய }

ஆதலால் இந்த நடு நாயகமாகிய
"சி"யை முயலுதல் வேண்டும். இதுவே
முயற்சி என்க. உலக விவகாரங்
களிலும் முயற்சி என்னும் சொல்
நன்மையைக் கருதிய இயக்கங்களுக்கே
பெரும்பாலும் வழங்கப்படுகின்றது.
ஒவ்வோர் இலக்கை நோக்கியே எவ
ரும் முயல்வர்—அசைவில் ஈடுபடுவர்.
லௌகிகத்தில் ஒவ்வோர் விஷயத்தை
— இலக்கை அவாவி அதற்குரிய
அசைவுகளில் ஈடுபடுவன வெல்லாம்
கீழ் நிறைப் பொலியுடையனவாய்
அசுத்த நிறையையே அதிகரிக்கச்
செய்து ஈற்றில் சாதலையே விளைப்பன
வாகும். ஆதலால் அழியாப் பேரி
ன்ப சுகத்தை அளிக்க வல்ல வாய்மை
யான முயற்சியில் ஈடுபடுவதே வேண்
டற்பாலது. மேலே கூறிய அரிய
பெரிய இலக்குமியை அடைந்த இட
மே பஞ்சபூத அசுத்தம் பிரளயத்
தால் அழிந்து ஒன்றுறக் கூடிக்
குழைந்த இடமாகும். பிரளயம் என்
ருல் என்னை? அது தான் ஒன்றுறச்
சேர்ந்து விடுதல் ஆகும். இந்த
இடத்தை அடைந்தவரே பிரளயா
கலர் என்க. இவர் தாம் வழியடியார்.
முத்தி நெறியில் — முத்தி வாயிலில்
நிற்பவர். வீடு பேற்றினை அடை
வோர் யாவரும் இப்படியை அடைந்
தே தீரவேண்டும். ஐந்தில் நடுநாயக
மாகிய இச்சிகாரப்படியை அடைந்து
சகல போகங்களையும் தனக்கு உரிமை
யாக்கி அநுபவித்து அவைகளை அவா
வுதலை நீக்கி மேற்படியில் ஏறுதல்
வேண்டும். அளவிறந்த துன்பங்களை
அநுபவித்து அப்பன் சோதனையில்
அகப்பட்டுத் தன் தலை துணிக்கப்படும்
வினை வரினும் நிலை தவருது மதிவை
ராக்கியம் பூண்டு ஒழுகினுல் இப் படி
கிடைக்கும். எம்பெருமான் இடபா
ரூடனுய்க் காட்சி கொடுத்துப் பூரண
கிருபை வழங்கும் இடம் இதுவே.
பிணமாய் விழுதற்குரிய புலாற்றுருத்
தியானது பூமணங் கமழும் பூந்துருத்
தியாய் மாற்றமடையும் இடம் இவ்
விடம் தான். "மணங் கமழ் தெய்
வத்து இள நலம்" திகழப் பெறும்
இடம் இவ்விடந்தான். முருகனுய்
எம்பெருமான் குமரனுனது—பிள்ளை
யான இடம் இவ்விடந்தான். மடி
யின்றி வாய்மையான முயற்சி யுடை
யராய் இப்படியை அடைந்தோர்
மூவுலகும் கோலோச்சுவர்.'பிரபஞ்சம்
முழுவதும் இவருக்கு அடிமையே.

### குறள்

மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
ருஅய தெல்லா மொருங்கு

(ஷை மடியின்மை 10.)

என்ருர் எமது பொய்யில் புலவர்.
(இ-ள்) மடியிலா மன்னவன்—அருமை
உடையது என்று சோம்பியிராது
மதி வைராக்கியத்தோடு முயலும் நிலை

# ஈழநாடும் தமிழும்

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன்

## வித்துவான் ப்ரம்மஸ்ரீ சி. கணேசையர்

அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியர்க்கே உரியது)

(20-ம் வாரத் தொடர்ச்சி).

### பண்டிதர்ராசர்

இவர் ஏறக்குறைய இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன்னே திரிகோண மலையிலே கோணேசுரராலயத்து அருச்சகராயிருந்தவர். வடமொழியிலும் தென்மொழியிலும் அதிசாமர்த்தியம் வாய்ந்தவர். கவி பாடுவதிலும் மிகச்சிறந்தவர். தக்கிண கைலாச புராணமெனப்படும் கோணாசலபுராணம் இவர் இயற்றியதாகும். அப்புராணத்துள்ள சிறப்புப்பாயிரக் கவி யொன்றினால் இவர் செகராஜசேகரமன்னன் காலத்திருந்தவரென்பது தெரிகிறது. அக்கவி,

" மணிகிறக்கண்டன்வடபெருங்கயிலையில்
அணிகிறக்கொடுமுடியாயிரத்தொருமுடி
படவராவொதுக்கப்பறித்தினிதிலங்கை
வடகடனவெண்மாருதம்பதிப்ப
வருமுக்கோணமலைதென்கயிலைப்
பரமர்க்குருத்திரர்பதிெனருபேரும்
ஒருபதுமுகுந்தருமொன்பதுவிரிஞ்சரும்
வருகடற்கமடம்வழங்கியமீனமும்
திருமலைதழுவியதெசமுகநிருதனும்
பொருமலைமதகரிப்புரவலர்பலரும்
பூசையொடிறைஞ்சியபுராணநூற்கதையைத்
தேசிகன்சொற்படிதென்கலைப்படுத்தி
யந்தாதித்தொடையடைவொடுதொடுத்து
நந்தாவிருத்தநவையறக்கூறினன்
அங்காட்டரசன்ஆரியர்கோமான்
பொன்னாட்டைடந்தருபொருவருகரதலன்
மறுகிலநிருபரைவானிலத்திருத்தி
யுறுகிலமுழுவதுமொருதனிபுரப்போன்
தென்னிலங்காபுரித்திசைதொறுமருவும்
மின்னிலங்கியவேல்மேவலர்புயத்துப்
படவராமுடித்தலைப்பார்முழுதாண்ட
இடபவான்கொடியெழுதியபெருமான்
சிங்கையாதிபன்சேதுகாவலன்
கங்கைநாயகன்கருங்கடற்சேர்ப்பன்
பௌவமேற்றுயில்பராபரன்சூட்டிய
தெய்வமாமுடிச்செகராசசேகரன்

---

பேறுடைய மெய்யடியான், அடியளந்தான் தாயது எல்லாம் ஒருங்கு எய்தும்—விண்டு வடிவாகிய பிரபஞ்ச முழுவதையும் தனக்கு உரிமையாகப் பெறுவான் என்பது.

ஈண்டு மன்னவன் என்பது நித்தியத்துவம் பெறுதற்குரிய மெய்யடியானை உணர்த்தி நின்றது. மூவுலகும் ஆளுதற்குரியார் அவரே யாதலின். மன்—நிலைபேறு. வியாபகமாகிய பிரபஞ்சம் விண்டு வடிவமாதலின் அடியளந்தான் தாயது எல்லாம் என்றார்.

"ஸ்ரீ" என்னும் இலக்குமியை-அமல முதற்படியை முயன்று அடையப் பெற்றோர் ஆற்றலும் பேறும் முன்னும் சில கட்டுரைகளில் விரித்துக் கூறப்பட்டன. ஆதலின் ஈண்டும் விரித்தல் மிகை.

இதுகாறும் கூறியவைகளால் எம்மை ஆண்ட நந்தி பெருமான் அமுத வாக்கியங்களுள் ஒரு சொல்லின் ஒரு விகுதியின் பொருள் ஒருவாறு விளக்கப்பட்டது.

உண்மை இவ்வாறாக, அகில மாக்களாகிய நாம் சிலபாஷைகளைப் படித்துவிட்டதனாலும், நூல்களில் கூறப்பட்ட சில சரியை கிரியை முதலியவற்றை உஞற்றுதலாலும் முற்று முணர்ந்தவராகவும் முத்திவாயிலில்; நிற்பவராகவும் துணிந்து அமைந்து விடுகின்றோம். அந்தோ! அந்தோ! இத்தீவினையெனும் கோரணிக்கு என்செய ஆம்! இவ்வுண்மைகளை அறிவதும் கடினம்; ஒருகால் அறியினும் வழுவின்றி ஒழுகுவ தென்றாலோ, அம்மம்ம! மா கடினம் மா பெரிது! மா எனப்பூப்பது அரிதரிது! பூத்தாலன்றோ மணம் முன்னிலையில் அறியப்படும். பூக்காதவரை சூனியமே.

சுபம்.

அவனதுகாலத்தத்திரிகோணைச்
சிவனதுகோயிற்சிவமறைமுதலோன்
அருமறையுபநிடமாகமஞ்சோதிடம்
விரிதமிழ்வரையறவிளங்கியகுரவோன்
சேயினுந்திறலான்றயாநிதியனையான்
முப்புரிநூற்புயன்முளரியந்தாமன்
செப்பரும்பண்டிதராசசிகாமணி
என்னுநாமத்தெங்குருபெருமான்
மன்னுநாற்கவியும்வல்லநாவலனே. என்பது.

கவிச்சுவையுணர்தற்காக இவர் இயற்றிய கோணாசலபுராணத்துள் ஒரு கவி ஈண்டுத் தருதும்;

"பூவெலாந் துய்யவாசம்புனமெலாமுனிவர்வாசம்
மாவெலாங்குயிலினோசைமலையெலாங்குயிலினோசை
காவெலாமுயர்ந்ததாழைகரையெலாங்கமழுந்தாழை
பாவெலாமரனார்தஞ்சீர்பகர்வரிதன்னோர்தஞ்சீர்."

---

## கவிராஜர்

இவர் ஊருந் திரிகோணமலையாகும். இவரும் முற்கூறிய பண்டிதராசரும் ஒரு காலத்தவரே. அஃது அவர் இயற்றிய கோணாசல புராணத்திற்கு இவரளித்த சிறப்புப் பாயிரக் கவியினால் அறியக் கிடக்கின்றது. இவர் கோணேசர் கல்வெட்டென வழங்கும் கோணேசசாசனத்தைப் பாட்டானும் உரையானும் இயற்றியுள்ளார். அதனுள் ஒரு பாட்டு ஈண்டுக் காட்டுதும்.

" திருந்துகலிபிறந்தைஞ்ஞூற்றொருபதுடனிரண்டாண்டுசென்ற [பின்னர்
புரிந்திடபமாதமதிலீரைந்தாந்தேதிதிங்கள்புணர்ந்தநாளிற்
றெரிந்தபுகழாலயமாஞ்சினகரமுங்கோபுரமுந்தேரூர்வீதி
பரிந்துரத்னமணிமதிலும்பாவநாசகச்சுனையும்பகுத்தான்
[மேலோன்.

இவர் இயற்றிய கோணேசர் கல்வெட்டையும் பண்டிதராசர் இயற்றிய திரிகோணாசல புராணத்தையும் பல ஏட்டுப்பிரதிகள் கொண்டு பரிசோதித்து அச்சிற் பதிப்பித்துதவியவர், புலோலி ஸ்ரீமான் பொ. வைத்தியலிங்க தேசிகர். அவர் செய்த உதவி ஈழநாட்டாரால் என்றும் மறக்கற்பாலதன்றாம்.

---

## சின்னத்தம்பிப்புலவர்

இப்புலவர் பெருந்தகையார் ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னரே நல்லூரிலிருந்தவரும், ஒல்லாந்த அரசினரால் தேச வளமை என்னும் நூலைத் திருத்தி அமைக்கும் வண்ணம் நியமிக்கப்பட்ட அறிஞர்களுள் ஒருவராய் விளங்கியவரும் பெரும் பிரபுவுமாகிய வில்லவராய முதலியாருடைய அருந்தவப் புதல்வர். இவர் யாரிடத்தில் கல்வி கற்றனர் என்பது தெரியவில்லை. இவர் இளமையிலேயே பாடும் சாமர்த்தியமுடையவரென்றும், மாடு மேய்க்கும் பிள்ளைகளுடன் இவர் விளையாடிக்கொண்டு நிற்கும்போது, அவ்வழியாக வந்த புலவர் ஒருவர் இவரை நோக்கி வில்லவராய முதலியார் வீடு எது? என்று வினவிய போது, இவர் உடனே வாயிலிற் கொன்றைமரம் நிற்கும் வீடே அவர் வீடு என்பதைக் குறிப்பிட்டுப்,

பொன்பூச் சொரியும் பொலிந்த செழுந்தாதிறைக்கும்
நன்பூதலத்தோர்க்கு நன்னிழலாம் — மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவராயன் கனக
வாசலிடைக் கொன்றை மரம்.

என்று ஒரு கவியினால் அப்புலவர் ஆச்சரியமுறுமாறு விடையிறுத்தாரென்றும் முதியோர் சிலர் கூறுவர். அன்றியும் ஒருநாள் இவர் தமது தந்தையார் ஒரு செய்யுளின் முதலடிகளிரண்டையும் பாடி, ஒரு ஏட்டிலெழுதி, ஏனையீற்றடியிரண்டையும் செவ்வனே பாடி நிரப்ப முடியாது வைத்துவிட்டு அயலூர்க்குச் செல்ல, இவர் அவ்விரண்டடியையும் செவ்வனே பாடி நிரப்பி வைத்தாரென்றும், பின் தந்தையார்வந்து அவ்வேட்டை யெடுத்துப்பார்த்தபோது தான் பாடிய செய்யுளின் ஈற்றடியிரண்டும் நிரப்பப்பட்டிருத்தல் கண்டு மகிழ்ந்து, அதனை நிரப்பி வைத்தவர் தம் புதல்வரே யென்றறிந்து, தம் சொற்படி பாடசாலைக்குச் செல்லாது விளையாட்டிற்குச் செல்லுதல் காரணமாக முன் இவர்பால் வைத்திருந்த வெறுப்பை நீக்கி, அன்றுதொட்டு இவரிடம்பேரன்புடையராயினாரென்றும், இங்ஙனம் இவர் இளமையிலே பாடத் தொடங்கியதற்குக் காரணம் இவர் பெற்றுக்கொண்ட சரஸ்வதி கடாட்சமேயென்றுங்கூறுவர். இவர் புலமைக்குக் காரணம் யாதாயினும் ஆகுக. இவர் பாடுதலிலே மிகுந்த சாமர்த்தியமுடையரென்பதில் தடையேயில்லை. இவர் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றவரென்பது இவர் பாடிய பிரபந்தங்களால் நன்கு புலப்படுகின்றது. இவர் பாடிய பிரபந்தங்கள், மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, கரவைவேலன் கோவை, பறாளைப்பள்ளு என்பன.

மறைசையந்தாதி : இது வேதாரணியேசுரர் மேற் பாடப்பெற்றது. இதற்கு யாழ்ப்பாணத்து உடுப்பிட்டி திரு. அ. சிவசம்புப்புலவரவர்களும், மதுரை மகா வித்துவான் சபாபதி முதலியாரவர்களு முரையெழுதியுள்ளார்கள்.

கல்வளையந்தாதி: இது யாழ்ப்பாணத்துச் சண்டிருப்பாயிலுள்ள கல்வளையென்னும் பதியில் எழுந்தருளியிருக்கும் விநாயகக்கடவுள்மீது பாடப்பெற்றது. இதற்கு யாழ்ப்பாணத்து வல்லிவெட்டித்துறை இயற்றமிழ்ப் போதகாசி

## வித்தக மதிப்புரை

இலங்கையில் பிரபல அதிகார புருடராய் (C. C. S.) இருந்து உபகார வேதனம் பெறுபவர்களும், ஆங்கிலம் தமிழ் என்னும் இரு மொழிகளிலும் வல்லவர்களும், பழந்தமிழ் நூற்பயிற்சியிலும் சரித்திர சிலாசாசன ஆராய்ச்சியிலும் மிகச் சிறந்தவர்களும், ஆங்கிலத்திலும் தமிழிலும் முறையே "Ancient Jaffna" "யாழ்ப்பாணச் சரித்திரம்" என்னும் நூல்களை இயற்றியவர்களும் கொழும்பு வாசியும் ஆகிய ஸ்ரீமாந்:

**C. இராசநாயகமுதலியார்**

அவர்கள் வழங்கியது.

"வித்தகம்" என்னும் உத்தம உயரிய வார வெளியீடொன்று சென்ற ஆண்டு பிற்பகுதி முதல் குருவாரந்தோறும் வந்துகொண்டிருக்கின்றது. இதன் இதழ்களில் சிலவற்றை ஆவலுடன் கூர்ந்து நோக்கிய போது, அரும் பெரும் பொருள் பொதிந்து ஆன்ம ஈடேற்றத்துக்கு அநுபூதிமான்களால் "நான் பெற்ற வின்பம் பெறுக வில்வையகம்" என அருளி வைத்த அறிவு நூற் கலைப் பகுதிகளின் கருத்துக்களை எடுத்து விளக்கிச் செல்லும் நுண் மாணுழை புல வாற்றல் கண்டு பேருவகை எய்தினும்.

### நன்கொடை

கோலாலம்பூர்ச் சைவ சித்தாந்த சபைத் தலைவரும் சைவாபிமான சீலரும் கல்வி கேள்விகளில் சிறந்தவருமாகிய ஸ்ரீமாந். Dr. விஸ்வலிங்கம் அவர்களால் ரூபா 6—0—0 நன்கொடையாய் அளிக்கப்பட்டது. எமது மனமார்ந்த நன்றி இவர்க்கு உரியதாகுக எனக் கூறுவதோடு, இத்தகைய சைவாபிமான சீலராகிய இப் பெரியார் எல்லா நலமும் பெற்று நீடு வாழும்படி திருவருளைப் போற்றுகின்றோம்.

(ப—ர்.)

"ஐரோப்பியராகிய நாம் மன மொழி "மெய்களிற் பரிபக்குவமும் பரம நெறி "யுங் கொண்டு இக பர மிரண்டிலும் ' பரிசுத்தராக விளங்க வேண்டின், "எத்தேசத்தாரின் காவிய கிரந்தங்களை "கற்க வேண்டுமென்றால், இந்தியா "வின் காவிய கிரந்தங்களே யென உண்மையோடு கூறுவேன்." என Max Muller கூறிய தற்கிணங்க அரிய தத்துவ நுண் பொருள்கள் இவ் வித்தக வெளியீட்டிதழ்களில் காணக் கிடக்கின்றன.

இன்னும் குருவாரத்தில் வந்துக் கொண்டிருக்கும் பெற்றி நோக்கின், மக்கள் தத்துவ ஞான விளக்கமுறுதற்குக் குருவைத் தேடி அலக்கணுறுது இதுவை குரு வாயிருந்து போதிக்கு மியல்பினைக் காட்டுகின்றது.

மேலும் பஞ்சாக்கிர மந்திரம் எவ்வாறு வேத சிவாகமாதி உபநிடத ஸ்ம்ருதி புராண இதிகாசக் கலைகளையெல்லாம் அடக்கிப் பரந்து விரிந்து எடுக்கும் பொருளுக் கிருப்பிடமாய்த் திகழ்கின்றதோ, அதுபோல ஐந்தெழுத்தால் விளங்கும் வித்தகமும் வித்தகமாய் விளங்கி ஞான வொளி பரப்பிச் சித்தமல மறுவித்துச் சிவமாக்கித் தமிழ் நாட்டு மக்களகத்து வரன் என்னும் வைப்புக்கோர் வித்தாய் விளங்குவதற்குத் தனது வாமன வடிவத்தினின்றும் திரிவிக்கிரம வடிவத்

ரியர் ஸ்ரீ. வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள் உரையெழுதியுள்ளார்கள்.

**கரவைவேலன்கோவை:** இது யாழ்ப்பாணத்துக் கரவெட்டியிலிருந்த பிரபு திலகராகிய வேலாயுதம் பிள்ளை மேற் பாடப்பெற்றது. இக்கோவையை அரங்கேற்றிய போது ஒவ்வொரு செய்யுட்கும் ஒவ்வொரு பொற்றேங்காய் பரிசிலாக அளிக்கப்பட்டது என்பர். இதனுள் பல செய்யுட்கள் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்களால் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் சில காட்டுதும்.

மாசாலமோமணிவாய்நோகுமோநும்மரபியலின்
ஆசாரமோவிரதத்தடைவோதிரை யாடைசுற்றுந்
தேசா திபர்மெச்சும் வேலன் கரவைச் சிலம்பனையீர்
பேசா திருக்கும் வகையின்ன வாறென்று பேசிடுமே.

பூவென்ற மாலிலங் கேசனை நாளைக்குப் போர்புரிய
வாவென்ற வீரன் கரவையில் வேல மகிபதிமேற்
பாவென்ற வாணிப் பவளச்செவ் வாய்மடப் பாவையிவள்
ஏவென்ற காதள வோடிய பார்வை யிமைக்கின்றதே.

**பளுளைப்பள்ளு:** இது யாழ்ப்பாணத்துப் பறளாய் என்னுமிடத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகக் கடவுள் மீது பாடப்பெற்றது. இதன் கவிகள் மிகவுஞ் சுவையுள்ளன. சுவையுணரும்படி சில காட்டுதும்.

பகுத்த வந்தணர் சாலைக டோறும்
பயிலும் வேதத் தொலிபண்ணை மீதிற்
றொகுத்த மள்ளர் குரவையை மாற்றிடு
சோழமண்டல நாடெங்கணுமே.

பண்ணிற்றேயப் பொருண்முடிப் புக்கட்டிப்
பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
யெண்ணிப் பொன்முடிப்புக்கட்டி வைத்திடு
மீழமண்டல நாடெங்கணுமே.

(தொடரும்.)

தைத் தோற்றுவிக்கும் என நம்புகின்றோம்.

இன்னும் இது மதத்தடிப் பேறிக் குமிறி முழங்கிக் கொண்டது கொண்டு, சாதித்துச் செல்லுஞ் சில பஞ்சிகைகள்போலாகாது, சமரசஞான வாயிலாக உடலுயிர்த் தன்மைகளையும் முத்தி நெறியையும் விளக்கிச் செல்கின்றது. சிற்சில துறைகள் புதியன கொண்டு மிளிர்ந்து ஆராய்ச்சிக் கேற்புடையனவாக விளக்கிச் செல்லுந் திண்மை அறிஞருள்ளத்தைத் தெருட்டாதிரா.

இத்தகைய இவ் "வித்தகம்" என்னும் பஞ்சிகையின் ஆசிரியராகிய ச. கந்தையபிள்ளை யென்னும் பேரறிஞர் கோவையின் வடபாலுதித்த ஞாயிறு போன்று தென்பாலுதித்து விளங்கும் ஞாயிறுவர். இவரது சித்தாந்த சைவ உண்மை விளக்க விரிகதராகியவித்தகமும் அதன்செல்வாக்கும் ஆயுளும்ஆசிரியர் ஆயுளும், பல்லாண்டு பல்லாண்டுசெழித்து நிலவி விளங்குவதாக எல்லாம் வல்ல இறைவன் திருவருளைப் பரவி ஏத்துகின்றோம்.

குறிப்பு:— எமது "வித்தக"த்தைத் தமது நுண்மாணுழை புலம் திகழும் ஆராய்ச்சி முறையால் ஆவலோடு படித்து ஆராய்ந்து, அது சிவாநுபூதிமான்களாகிய தத்துவப் பெரியார் அருளிய மறைகளின் உண்மைப் பொருளையே விளக்கிச் செல்கின்றது என்று தமது தூய உள்ளத்து எழுந்த உவகை மேலீட்டினால் உண்மையை உரைத்து, எம்பெருமான் திருவடி எனப்படும் பஞ்சாக்கர (பஞ்சகாரம்) வடிவமாய் விளங்கும் இத்தகைய "வித்தகம்" பல்லாண்டு வாழ்க என அதனையும் அதன் ஆசிரியரையும் வாழ்த்திய உத்தமரும், வித்தியாவிநோதரும், மதிப்போலிவிற் சிறந்த பெரியாருமாகிய ஸ்ரீமாந் முதலியார் அவர்களுக்கு எமது மனமார்ந்த வணக்கத்தைச் சமர்ப்பிப்பதே யன்றி வேறு உஞற்றற்பால கைம்மாறு யாதும் அறியகில்லேம் என்பதனைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்வதோடு, கல்வி கேள்விகளிற் சிறந்த இப்பெரியார் உலகிற்குஉபகாரியாய் நீடுவாழும்படி திருவருளைப் போற்றுகின்றோம்.

(ப—ர்.)

## மதிப்புரை

"இந்து நேசன்" என்னும் செந்தமிழ் வாரத்தாளுக்குரிய 1933-ம் ஆண்டின் அநுபந்தமாய் அமைந்த புத்தகப் பிரதி ஒன்று கிடைக்கப் பெற்றுப் படித்து மகிழ்கூர்ந்தேம். இஃது உருவத்தாலும் பொருளடக்கத்தாலும் மிகப் பெரியதாய்க் கற்றோரும் மற்றோரும் பன்முறை படித்துப் பயனடைதற்குரிய அரிய பெரிய கட்டுரைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் கொண்டு மிளிர்கின்றது. கல்வி கேள்விகளிலும் அநுபவ அறிவிலும் சிறந்த வித்துவப் பெரியாராகிய முந்நீர்பள்ளம் ஸ்ரீமாந். பூரணலிங்கம்பிள்ளை (B.A.L.T.) அவர்கள் இந்திய சன சமூகப்படிப்பு (Mass Education in India) விஷயமாக ஆங்கிலத்தில் எழுதிய மிகப் பெரிய அறிவுரையானது தற்காலத்தவர் பலர்க்கும் பயன் படுமுறையில் ஆழ்ந்த கருத்துக்களோடு பலதுறைப்பாற்படவிரிவுற அமைந்து முதற் கண்ணதாகி விளங்குகின்றது. ஏனைய ஆங்கிலக் கட்டுரைகளும் நுண்மாணுழைபுலம் திகழ வரையப்பட்ட அரிய பொருளுரைகளாய் அமைந்துள்ளன. தமிழ்க்கட்டுரைகள் எல்லாம் பலதுறைப்பாற்பட அமைந்து கல்விகேள்விகளிற் சிறந்த அறிஞர் பலரால் செவ்விய நடையில் எழுதப்பட்டனவாய் மனித வாழ்க்கைக்குரிய அரியபெரிய நீதிகளையே உள்ளுறையாகக் கொண்டு திகழ்கின்றன. இக்கட்டுரைகளின் அருமை பெருமை இவ் அநுபந்த நூலைப் படிப்பவர்க்கே நன்கு புலனாகும். புத்தக முகத்துக்காணப்படும் தோட்டக்காரன் பிரதிமையானது சிற்பத்தின் இயற்கை வளப்பை நன்கு புலப்படுத்துகின்றது. சிவாலய குகாலய உருவப்படங்களும் மாட்சிதங்கிய ஜியார்ச் மன்னர் படம் மேரிராணியார் படம் இந்திய பிரதி காவலர் படம் முதலிய அதிகார புருடர் உருவப்படங்களும் கட்டுரையாளர் உருவப்படங்களும் மற்றைய இந்திய தேசத்துள்ள வித்துவான்கள் பாகவதர் சங்கீத விற்பன்னர் முதலியபெரியார் உருவப்படங்களும் பார்ப்பவர் கண்களுக்கும் பெருவிருந்தாகி இவ் அநுபந்த நூலுக்கு அணிகலனாகிக் கவினுகின்றன. இத்தகைய அநுபந்த நூலால், இந்து நேசன்" ஆசிரியராகிய ப்ரம்மஸ்ரீ அனந்தையர் அவர்கள் அறிவுலகத்துக்கு அருமருந்தனைய தோர் பெரு விருந்தினை அளித்துள்ளனர் என்பது மிகையன்று. இவ் ஆசிரியர் கல்வியறிவின் பரப்பும் மதிப்பொலிவும் அநுபவமாண்பும் அறிவுலகத்தால் என்றும் பாராட்டற் பாலனவேயாகும். "இந்துநேசன்" என்னும் வாரத்தாளும் அதன் ஆசிரியரும் நீடுவாழும்படி இறைவன் அருள்புரிவானாக. இதன் விலை ரூபா ஒன்றுதான்; இந்நூல் ஷை ஆசிரியர் அவர்களிடம் பெறற்பாலது.

[ப—ர்]

## "வித்தகம்"

### வருட சந்தா விவ்ரம்

முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3-0-0

மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

## அறிவிப்பு

கடிதர்களின் அபிப்பிராயங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள்.

## "வித்தகம்"

விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ. 0—8—0

கோர்ட்டு விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 1—0—0

☞ நீடித்த விளம்பரங்களுக்கு தனி விகிதம்.

வித்தக நிலையம்
புதுச்சேரி.

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant R.Nagarattinam